## இனிமையான குழந்தைகளே! நீங்கள் கூடாநட்பில் (சங்கதோஷ்) மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் தவறான நட்பில் வருவதால் தவறான செயல்களைச் செய்கின்றீர்கள், பாபாவின் நினைவு மறந்து விடுகின்றது!

கேள்வி: எந்த நடத்தையின் ஆதாரத்தில் குழந்தைகளாகிய நீங்கள் உங்களது மன நிலையை முன்னேற்ற முடியும்?

பதில்: எப்பொழுதாவது, ஏதாவது தவறு செய்துவிட்டால் பாபாவிடம் மன்னிப்பு கேட்கும் குணம் இருக்க வேண்டும். என்னை மன்னித்து விடுங்கள் பாபா என்று கூறவேண்டும். இதில் சிறிது கூடதேக அபிமானம் இருக்கக்கூடாது. இதன் மூலம் மனநிலை முன்னேறிக் கொண்டே யிருக்கும். பாபாவிடம் உண்மையான உள்ளத்துடன் இருப்பதே முன்னேற்றத்திற்கு ஆதாரம். ஒருபோதும் தன்னைத் தானே மிகவும் புத்திசாலி என்று எண்ணக்கூடாது. ஒவ்வொருவரும் ஏதாவது தவறுகள் செய்து விடலாம். ஏனென்றால் இதுவரை யாருமே சம்பூர்ணமாக ஆகவில்லை.

பாடல்: உன்னுடைய வழியில் நடப்பேன்.............

ஓம்சாந்தி! ஏதாவது கூற வேண்டும், ஆதலால் ஓம்சாந்தி என்று கூறுவது மிகவும் நல்லது. தனது சுயதர்மத்தினை ஆத்மா கூறுகின்றது. நான் சாந்தி என்று பாபாவும் கூறுகின்றார். சாந்தி தேசத்தில் வசிப்பவர். நீங்கள் கூட உண்மையில் ஆத்மாக்கள். உங்களின் சுயதர்மம் சாந்தி. முழு உலகமும் சாந்தி, சாந்தி என்று கூறுகின்றது, ஆனால் சாந்தி என்று எதனை சொல்லப்படுகின்றது என்று யாருக்குமே தெரிய வில்லை. சண்டைகள், கலவரங்கள் நடைபெறுகின்றன. அவை அமைதியாக வேண்டும். அந்த அமைதி எதற்கும் உபயோகம் இல்லை. வீட்டில் கணவன், மனைவி உள்ளனர், சிலர் வீட்டில் சண்டை போடுகின்றார்கள், சிலர் சண்டைப்போடுவதில்லை. அது அமைதியா என்ன? அமைதி என்பதன் பொருள் வேறு. ஆத்மாவின் சுயதர்மம் அமைதி. அதேபோல் பாபாவின் சுயதர்மம் அமைதி. ஆத்மாவின் தந்தை யார்? பரமபிதா பரமாத்மா. அவரின் தர்மம் என்ன? அவரின் தர்மம் அமைதி. பரமபிதா பரமாத்மா சாந்தி தேசத்தில் வசிக்கக்கூடியவர். நாம் கூட சாந்தி தேசத்தில் வசிப்பவர்கள். யார் வந்தாலும் கூறுங்கள், உங்களுடைய சுய தர்மம் சாந்தி அல்லவா? நீங்கள் உண்மையில், அங்கு வசிக்கக் கூடியவர்கள். இங்கு தனது பாகத்தை நடிப்பதற்காக வந்துள்ளீர்கள். உடல் மூலம் தனது பங்கை நடிக்க வேண்டும். உண்மையில் அமைதிக்காக காட்டிற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. தனது சுயதர்மத்தைப் பற்றி ஆத்மா விற்குத் தெரியும். ஆத்மா களைப்படைந்தவுடன் இரவில் அசரீரியாக ஆகிவிடுகின்றது. எவ்வளவு அமைதியாக இரவில் இருக்கின்றது. அதிகாலை ஆகியவுடன் சப்தங்கள் ஆரம்ப மாகின்றது. அது எல்லைக்குட்பட்ட இரவு மற்றும் பகல். இப்போது எல்லைக்கு அப்பாற்பட்ட பகல் மற்றும் இரவு. ஆத்மா 84 பிறவியின் பாகத்தினை நடித்து நடித்து களைப்படைந்துவிட்டது. இப்போது சாந்தி தாமத்திற்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்று ஆத்மா கூறுகின்றது. பாபாவும் கூறுகின்றார் சாந்திதாமம், சுகதாமத்தினை நினைவு செய்யுங்கள். சுகதாமத்தில் அமர்ந்து நினைவு செய்வோமா என்ன? துக்கமான, அசாந்தியான உலகத்தில் தான் நினைவு

செய்கின்றோம். இப்போது பாபா கூறுகின்றார் குழந்தைகளே! இப்போது நாடகம் முடிவடையப்போகின்றது. நீங்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டும். பின்பு உங்களுக்கு சாந்தி, சுகம் இருக்கும்.

நான் வழிகாட்டி என்று பாபா கூறுகின்றார். உங்களை உண்மையான யாத்திரையில் அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றேன். ஒருவர் தான் சாந்திதாமத்திற்கு வழிகாட்டியா? அல்லது அவருடைய குழந்தைகளுமா? ஒருவர் மூலமாக காரியத்தினைச் செய்ய முடியாது. எவ்வளவு பெரிய சேனை. அனைவரின் முகமும் சாந்திதாமத்தின் பக்கம். அது மேலான உலகம். பத்திரிநாத், அமர்நாத் செல்வது தூரமில்லை. அங்கு செல்வது மிகவும் எளிது. மூலவதனம், சூட்சுமவதனம் செல்வது எளிதா? அமர்நாத், பத்திரிநாத் செல்வது எளிதா? சூட்சுமவதனம், மூலவதனம் அருகில் உள்ளதா? அல்லது அமர்நாத், பத்திரிநாத் அருகில் உள்ளதா? மூலவதனம், சூட்சும வதனம் பார்க்கும்போது மிகவும் மேலே உள்ளது. அங்கு செல்வதற்கு நேரமாவதில்லை. ஒரு விநாடியின் விசயம். புத்தியின் மூலமாக நினைவு செய்யுங்கள். ஸ்தூலமான யாத்திரை என்பது புதியதாக இல்லை. அந்த யாத்திரைகள் அரைகல்பமாக செய்து வந்தீர்கள். இந்த ஆன்மீக யாத்திரையை ஒரே ஒரு முறை பாபா வந்து கற்றுத் தருகின்றார். நீங்கள் செல்லமான குழந்தைகள், நீங்கள் வழியினைக் கூறவேண்டும். நீங்கள் கோவில்களுக்குச் சென்று கூறுங்கள். தேவி தேவதைகள் எப்போது இராஜ்யம் செய்தார்கள். இவர்களை பூஜைக்குரியவராக ஆக்கியது யார்? உங்களுக்குத் தெரியும் நாம் பூஜைக்குரியவர்களாக இருந்தோம். பூஜாரியாகி விட்டோம். பூஜாரி என்ற நிலை குறைந்தது. பூஜ்ய நிலை என்பது உயர்வானது. பாபா பூஜைக்குரியவராக ஆக்குகின்றார். நீங்கள் பூஜைக்குரிய தேவி, தேவதைகளாக இருந்தீர்கள். பிறகு பூஜாரியாக ஆனீர்கள். இப்போது பூஜையை விட்டுவிடுங்கள், பிறகு பூஜைக்குரியவராக ஆக வேண்டும். மாயை நிறைய தடைகளை ஏற்படுத்துகின்றது. அபலைப் பெண்கள் மீது மிகவும் கொடுமைகள் நடைபெறுகின்றன. இதர யாத்திரைகள், கோவில்கள், சத்சங்கத்திற்குச் செல்வதற்கு தடைகள் போடுவதில்லை. இங்கு பூஜாரி நிலையிலிருந்து பூஜைக்குரிய நிலையை அடைவதில் மாயை மிகவும் தொந்தரவு செய்கின்றது. அடிக்கடி கீழே விழுந்து விடுகின்றார்கள். காம விகாரத்தில் செல்வது மிகவும் மோசமானது. விஷக்கடலில் மூழ்கிக்கொண்டேயிருக்கின்றார்கள். பாபா கூறுகின்றார், குழந்தைகளே காமம் மிகவும் பெரிய எதிரி. ஆதலால் விகாரத்தில் செல்ல வேண்டும் என்ற எண்ணமே வரக்கூடாது. இதன் மூலம் தான் அசுத்தமாகின்றார்கள். இங்கு வருபவர்களின் புத்தியிலிருந்து விஷம் (விகாரம்) நீங்கி விட்டது என்று எண்ணாதீர்கள். அவ்வாறு சிலர் இருக்கின்றார்கள், மற்றவர்களைப் பார்த்தவுடனே அசுத்தமாவதற்கு உள்ளே புயல் வீசுகின்றது பாபா கூறுகின்றார்: ஒருபோதும் அசுத்தமாகக்கூடாது. யாருக்கும் பின்னாலும் போகக்கூடாது. ஒருபோதும் விகாரத்தில் விழ வேண்டும் என்ற முயற்சி செய்யக்கூடாது. இவற்றிலிருந்து பாபா காப்பாற்றிக் கொண்டே யிருக்கின்றார். பாதுகாத்துக் கொள்வதிலும், பிறகு கீழே விழுவதிலும் எவ்வளவு போராட்டம் நடைபெறுகின்றது. எவ்வளவு புயல்கள் வீசுகின்றன. எவ்வளவு நல்ல நாணயமான, கட்டளைக்குப் கீழ்படிந்த, சேவை செய்யக்கூடிய குழந்தைகள் இருந்தார்கள், மாயையின் பலத்த அடி விழுந்தவுடன் முற்றிலும் முடிந்து போய் விட்டார்கள், இறந்து விட்டனர். இதுவும் டிராமா. மாயை என்பது அசுத்தமாக ஆக்குகின்றது. பாதி கால்பம்

துக்கத்தினைக் கொடுக்கின்றது மாயை. பாபா அல்ல. ஈஸ்வரன் தான் சுகம், துக்கம் தருகின்றார் என்று தோஷம் (பழி சொல்கின்றார்கள்) கூறுகின்றார்கள். ஈஸ்வரனை தந்தை என்று புரிந்துக் கொள்ளவில்லை. பரமாத்மா எவ்வாறு துக்கத்தினைக் கொடுப்பவர், பரமாத்மாவே துக்கம் கொடுத்தார் என்றால், மனிதர்கள் மற்றவர் களுக்கு மிகவும் அதிகமான துக்கத்தினைக் கொடுப்பார்கள். பாபா கூறுகின்றார்: நீங்கள் தான் அம்மாதிரியான கர்மம் தனக்காக செய்கின்றீர்கள், கூடா நட்பால் தவறான செயல்களைச் செய்து வருகின்றார்கள். பாபாவை மறந்து விடுகின்றார்கள். சாதாரணம் அல்லவா? குழந்தைகள் மறந்து விடுகின்றார்கள். பாபா நல்ல படிப்பினைத் தருகின்றார். அதனை மறந்து விடுகின்றார்கள். பாபா கூறுகின்றார்: யோகம் நன்றாக செய்வதில்லை. நன்றாக ஞானத்தினைக் கூறுவேன் என்று அவ்வாறு எண்ணாதீர்கள். ஒரு கதை உள்ளது பண்டிதர் பிறருக்குக் கூறுவார் இராமா என்று கூறினால் நதியினைக் கடந்து விடலாம். ஆனால் அவரால் அவ்வாறு நடந்து செல்ல முடியவில்லை. செல்வதற்கு படகு கொண்டு வாருங்கள் என்று கூறினார். எனவே சொல்பவர்களாக மட்டுமின்றி செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். சொல், செயல் இரண்டுமே சமமாக இருக்க வேண்டும். ஆதலால் பாபாவை மறந்துவிடாதீர்கள். பாபா தவறுகளைச் செய்யாத வராக ஆக்குகின்றார். பாபா கூறுகின்றார் ஏதாவது தவறு ஆகிவிட்டால் அவசியம் மன்னிப்பு கேட்க வேண்டும். என்னை மன்னித்துவிடுங்கள் பாபா. இது தவறு என்று சிவபாபா கூறுகின்றார் என்றால், பாபா என்னை மன்னித்துவிடுங்கள் என்று கூறவேண்டும். நல்ல நல்ல குழந்தைகளிடம் கூட இம்மாதிரி மன்னிப்பு கேட்கும் குணமில்லை. இ,வ்வளவு பெரிய தவறு செய்துள்ளீர்கள், மன்னிப்பு கேளுங்கள். தன்னை மிகவும் கெட்டிக்காரன், புத்திசாலி என்று எண்ணுகின்றார்கள். பாவத்தினை செய்துவிட்டால் மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லையென்றால் தவறுகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். பாபாவிடம் மிக நன்றாக புத்தியோகம் இருக்க வேண்டும். நன்றாக ஞானத்தினைக் கூறினாலும் யாரும் சம்பூரணமாகவில்லை. இறுதிவரை கற்றுக் கொள்வது, கீழே விழுவது நடைபெறும். இந்த தவறினை நான் செய்துவிட்டேன், பாபா என்னை மன்னித்து விடுங்கள். கருணை உள்ளம் கொண்டவரே மன்னித்து விடுங்கள். நாள் முழுவதும் பக்தி மார்க்கத்தில் மன்னிப்பு கேட்கின்றார்கள். பாபாவிடம் மன்னித்து விடுங்கள் என்று கேட்கின்றார்கள். பிறகு தர்மராஜ் மூலமாக தண்டனையைக் கொடுக்காதீர்கள். ஆதலால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நான் 16 கலைகள் நிறைந்த சம்பூர்ண நிலையை அடைந்து விட்டேன் என்று எண்ணாதீர்கள். குழந்தைகள் நிறைய பேருக்கு கெட்ட கனவுகள் வருகின்றன. பாபாவின் நினைவு நிலையாகயில்லை. தன்னை மிகுந்த புத்திசாலி என்று நினைக்கக் கூடாது. இறுதியில் 16 கலைகள் நிறைந்தவர்களாக ஆவீர்கள். இப்போது கிரகணம் பிடித்துள்ளது. இங்கு அமர்ந்திருக்கும் போதே பறக்கும் நிலை இருக்க வேண்டும். ஆத்மாவிற்கு ஈர்ப்பு ஏற்படுகின்றது. முழு கல்பத்தின் களைப்பு உள்ளதால் சீக்கிரம், சீக்கிரமாக போக வேண்டும். ஆனால் தகுதி யானவர்களாக ஆக வேண்டும். ஒருசிலருக்கு இங்கங்கு சுற்றுவது, ஆபரணங்களை அணிந்து அழகு செய்து கொள்வதிலேயே குஷியாக ஆகின்றார்கள். பிறகு துக்கம் வரும்போது பாபாவை விட்டுவிட்டால் இந்தநிலை என்று எண்ணுகின்றார்கள். நல்லது. தைரியத்துடன் இருங்கள். சிறிது கற்றுக் கொள்ளுங்கள். தீமை செய்பவர்களுக்கும் நன்மைகளைச் செய்ய வேண்டும். தனது மூளையைக் கெடுத்துக் கொள்கின்றார்கள். மாயை கீழே

தள்ளுகின்றது. பாபா உயர்த்துகின்றார். இவை யாவும் புத்தியோகத்தின் விஷயம் குறிக்கோள் மிகவும் உயர்வானது. முயற்சியில் சமயம் தேவைப்படுகின்றது. இலட்சியம் மிகவும் எளிமையானது. ஒரு வினாடியில் நீங்கள் முக்தி, ஜீவன் முக்திக்கு அதிகாரியாக ஆகிவிடுகின்றீர்கள். ஒருமுறை பாபா என்று கூறிய பின்னர் ஏன் மறந்து விடுகின்றீர்கள். பாபாவிடம் இருந்து சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைகின்றோம் என்ற நம்பிக்கை வந்தவுடன் ஏன் விழுகின்றீர்கள்? தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதற்கு நினைவு செய்ய வேண்டும். நல்ல, நல்ல குழந்தைகள் கூட மறந்துவிடுகின்ற காரணத்தால் சேவையில் களங்கம் ஏற்படுகின்றது. சேவையும் குப்தமாக (ரகசியமாக) நடைபெறுகின்றது, சேவையில் குந்தகம் கூட குப்தமாக நடைபெறுகின்றது. உலகத்திற்கு என்ன தெரியும்? யாருக்குள் பூதம் பிரவேசம் ஆகின்றது. அசுத்தமான ஆத்மா பிரவேசம் ஆகின்றது என்றால், அது கூட நஷ்டத்தினை உண்டாக்கும். மாயாவி ஆத்மா பிரவேசம் ஆகின்றது. ஞானம் இருந்தாலும் யாரும் முழுமையான நிலையை அடையவில்லை. ஏதாவது குறைகள் என்பது இருந்தால் பயம் என்பது இருக்க வேண்டும். நாம் பாபாவின் ஸ்ரீமத்படி தான் நடக்க வேண்டும். ஸ்ரீமத்படி நடக்கவில்லை, தவறான கர்மம் செய்து விட்டால் பதவி கெட்டுப்போய்விடும். தண்டனைகளையும் அடைய வேண்டும். இங்கேயே கர்மத்தின் பலன்களை மிகவும், கடுமையாக அனுபவிக்க வேண்டும். ஆதலால் கர்மாதீத் நிலையினை அடைய முயற்சி செய்யுங்கள்.

பாபாவிடம் மிகவும் உண்மையாக இருக்க வேண்டும். அனைவருக்கும் சிவபாபாவிடம் தொடர்பு உள்ளது. அனைத்து சென்டர்களும் சிவபாபாவுடையது. பின்னர் எங்களுடைய சென்டர் என்று ஏன் கூறுகின்றீர்கள்? நீங்கள் சிவபாபாவுடையவர்கள். பாபாவுடைய விஷ்வ வித்தியாலயம். ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம். பிறகு என்னுடைய சென்டர் என்று ஏன் கூறுகின்றீர்கள்? இம்மாதிரியான எண்ணம் வந்தாலே இறப்பு. எனது, எனது என்று கூறிக் கொண்டே நிறைய பேர் கீழே விழுந்து விட்டார்கள். அனைத்துமே சிவபாபாவுடையது. நீங்கள் கூறுகின்றீர்கள் பாபா இந்த மனம், உடல், செல்வம் அனைத்துமே உங்களுடையது. பாபா கூறுகின்றார். சொர்க்கத்தின் இராஜ்யம் உங்களுடையது. எவ்வளவு வட்டி (சன்மானம்) கொடுக்கின்றார். நீங்கள் என்ன கொடுக்கின்றீர்கள். இறப்பிற்கு முன்பே சுடுகாட்டில் உள்ள வெட்டியானிடம் கொடுக்கின்றீர்கள். பொருட்களை தானம் செய்கின்றீர்கள். உயிர் பிழைக்க மாட்டார் என்று தெரிந்தவுடன் தானம், புண்ணியம் செய்கின்றீர் கள். பாபாவும் கூறுகின்றார்: குழந்தாய்! உயிருடன் இருக்கும்போதே செய், இது பழைய உடல். ஆத்மாக்களாகிய நீங்கள் என்னுடையவர்கள். இந்த உடலில் பாகத்தை நடித்து, நடித்து பழையதாகி விட்டது. இப்போது என்னுடையவராக ஆகிவிடுங்கள். ஆத்மாவும், உடலும் சுத்தமாகி விடும். இரண்டும் சேர்ந்து சுத்தமாகிக் கொண்டிருக்கின்றது. அசுத்தமாக ஆகிவிட்ட ஆத்மாவை சுத்தமாக ஆக்க வேண்டும். என்னுடன் யோகம் செய்தால் தான் சுத்தமாகும். யோகம் செய்தால் முன்னேற்ற கலை. யோகம் செய்யவில்லை என்றால் தாழ்ந்த நிலைக்கு போகும் கலை. சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும். சேவைக்கு செல்லட்டுமா என்று கேட்கக் கூடாது. பாபா புரிந்து கொள்வார் ஆர்வமில்லை. மனம், சொல், செயல் மூலமாக சேவை செய்ய வேண்டும் என்று ஆர்வம் இருக்க வேண்டும். மனதின் மூலமாக அல்லது வாயால், செயலால் ஏதாவது சேவை செய்வதில் ஈடுபடவேண்டும். அதற்கான பலன் கிடைக்கும்.

தானாகவே செய்யக் கூடியவர்கள் தேவதைகள், சொல்லி செய்பவர்கள் மனிதர்கள், சொல்லியும் செய்யவில்லை என்றால் எதற்குமே உதவாதவர்கள். எந்தளவு சேவை செய்கின்றீர்களோ அந்தளவு பலன் கிடைக்கும்.

சிவபாபா கேட்கின்றார்: குழந்தைகளே! எனக்கு கை உள்ளதா? இந்த உடலில் சிவபாபா அமர்ந்துள்ளார். கடிதம் எழுதுகின்றார். வாகனத்தின் மூலம் நாள் முழுவதும் அமர்ந்து பயணம் செய்வார்களா? காளை வாகனம். காளைக்கு எப்போது களைப்பு ஏற்படுகின்றதோ அப்போது கண்ணிலிருந்து கண்ணீர் வரும். இங்கு கண்ணீர் வருகின்ற விஷயமல்ல. இவருக்கு சேவை செய்ய வேண்டும். குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். என்னையே நினைவு செய்யுங்கள். இது சிவபாபா கூறுகின்றார். இவருடைய ஆத்மாவும் கேட்கின்றது. இது மிகவும் எளிமையான விஷயம். எல்லையற்ற பாபா சொர்க்கத்தின் படைப்பாளர். பாபா வருவதே சொர்க்கத்தினை ஸ்தாபனை செய்து நரகத்தினை அழிப்பதற்கு. மகாபாரத யுத்தமும் எதிரிலேயே உள்ளது. யாதவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களும் உள்ளார்கள். நீங்கள் புரிந்து கொண்டீர்கள். விளையாட்டு முடிவு அடையப்போகின்றது. பாபா அழைத்துச் செல்ல வந்திருக்கின்றார். தலைமீது பாவ கர்மத்தின் சுமை அதிகம் உள்ளது. நினைவு என்பது செய்யவில்லை என்றால் மகாராஜா, மகாராணியாக ஆக முடியாது. இது இராஜயோகம். பிரஜை யோகமல்ல. யோகம் சரியாகச் செய்யவில்லை என்றால், பிரஜையாக ஆகிவிடுகின்றார்கள். நாங்கள் முழுமையாக ஆஸ்தி அடைவோம் பாபா என்று கூறுகின்றீர்கள். சேவை செய்வதற்கான ஆர்வம் வேண்டும். இந்த சமயம் உடலை விட்டு விட்டால் எனது நிலை என்னவாகும் என்று பாபாவிடம் கேளுங்கள். இறுதியில் தான் பரிபூரண நிலை என்பதை அடைய முடியும். இப்போது நீங்கள் முழுமையான நிலையை அடையவில்லை. தன்னுடைய நிலையினை சோதனை செய்து பார்க்க வேண்டும். நாம் எந்தளவு பாபாவின் சேவையில் இருக்கின்றோம்? எந்தளவு கட்டளைக்குக் கீழ்படிந்தவராக இருக்கின்றீர்கள்? எந்தளவுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற துடிப்பு உள்ளது? பிறருக்கு உயிர்தானம் கொடுக்க வேண்டும்? பாவம் மிகவும் துக்கத்தில் உள்ளார்கள். இவர் ஒருவர் தான் சத்குருவாக உள்ளார். சாந்திதாமம், சுகதாமம் அழைத்துச் செல்வதற்கு வந்துள்ளார். அந்த குருமார்கள் தன்னை ஜகத்பிதா, ஜெகத் ஆசிரியர் என்று கூறமுடியாது. தன்னை ஜெகத்குரு என்று கூறிக்கொள்கின்றார்கள். இவர் உலகத்திற்கே தந்தை, டீச்சர், குருவாக உள்ளார். உங்களுக்குத் தெரியும், பாபா வந்துவிட்டார், பாபாவிடமிருந்து முழுமையாக ஆஸ்தியினை எடுத்துக் கொள்ள வேண்டும். தேக அபிமானம் என்பது நல்லதல்ல. ஆத்மா என்ற எண்ணத்திலிருந்து பாபாவை நினைவு செய்யுங்கள். உங்களுக்கு நோயற்ற உடல் கிடைக்கும். அங்கு தூய்மை, சுகம், சாந்தி, செல்வம் நிறைய இருக்கும். அளவில்லா செல்வம் இருக்கும். இங்கு வயிற்றிற்காக எவ்வளவு சண்டைகள்! நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) ஆன்மீக வழிகாட்டியாகி உண்மையான யாத்திரை செய்யுங்கள்,

மற்றவர்களை செய்ய வையுங்கள். புத்தி யோகத்தினை மிகவும் கவனமாக கவனித்துக் கொள்ள வேண்டும். தன்மீது மிகுந்த எச்சரிக்கை இருக்க வேண்டும்.

(2) பாபாவிடம் உண்மையாக இருக்க வேண்டும். கர்மாதீத் நிலையை அடைவதற்கான முயற்சியினை செய்ய வேண்டும். உயிருடன் இருக்கும்போதே அனைத்தும் பாபாவிடம் அர்ப்பணித்து பயனுடையதாக ஆக்க வேண்டும்.

வரதானம் : தனது நடத்தை மற்றும் முகத்தின் மூலம் சேவை செய்யும் நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரி ஆகுக.

தந்தையை அறிந்து, அடையக் கூடிய கோடியில் சில ஆத்மாக்களாகிய நாம் ஆத்மாக்கள் தான் என்ற நினைவில் சதா இருங்கள். இந்த குஷியிலேயே இருந்தீர்கள் எனில் உங்களது இந்த முகம் நடந்தாலும், சுற்றினாலும் சேவை நிலையமாக மாறி விடும். உங்களது மகிழ்ச்சியான முகத்தின் மூலம் தந்தையின் அறிமுகம் கிடைத்துக் கொண்டே இருக்கும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் அத்தகைய தகுதியானவர் என்று தான் புரிந்திருக்கின்றார். எனவே நடந்தாலும், சுற்றினாலும், சாப்பிட்டாலும்-குடித்தாலும் தனது நடத்தை மற்றும் முகத்தின் மூலம் தந்தையின் அறிமுகம் கொடுக்கும் சேவை செய்வதன் முலம் எளிதாகவே நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரி ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்: யார் அங்கதனுக்குச் சமமாக சதா ஆடாது-அசையாத ஏக்ரஸ் நிலையில் இருக்கிறார்களோ, அவர்களை மாயை எதிரி அசைக்கவே முடியாது.